ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1713/34 - 2011 ජූලි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.07.07
*1713/34 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகியதன் காரணமாக போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65(அ) 1ஆம் பிரிவின் கீழ், இரெட்ணசிங்கம் மகேந்திரன் எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. விநாயகமூர்த்தி சிறிதரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது போரதீவுப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. விநாயகமூர்த்தி சிறிதரன் என்பவர், போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
போரதீவுப்பற்று பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, ஆனி 27.

7 - 579/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் போரதீவுப்பற்று பிரதேச சபையின் துணைத்தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக போரதீவுப்பற்று பிரதேச சபையின் துணைத்தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65(அ) 1ஆம் பிரிவின் கீழ், விநாயகமூர்த்தி சிறிதரன் எனும் துணைத்தவிசாளர் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. சீராளசிங்கம் யோகேஸ்வரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது போரதீவுப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. சீராளசிங்கம் யோகேஸ்வரன் என்பவர், போரதீவுப்பற்று பிரதேச சபையின் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
போரதீவுப்பற்று பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, ஆனி 27.

7 - 579/2

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகல் காரணமாக போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

இரத்தினசிங்கம் மகேந்திரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. குணரெட்னம் யோகநாதன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது போரதீவுப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்னாயக்க ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. குணரெட்னம் யோகநாதன் என்பவர், போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
போரதீவுப்பற்று பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, ஆனி 27.

7 - 579/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.